செய்திவெளியீடு எண்–149 நாள்–13.02.2010

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்.

“ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்ற உயரிய நோக்கத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1970 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் தோற்றுவிக்கப்பட்டு நகர பகுதிகளில் உள்ள குடிசைப்பகுதிகளை மாற்றி அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டி மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருகிறது. இத்திட்டப்பணிகளின் அடிப்படையில் இன்று (13.2.2010) ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட தோமையப்பன் தெருவில் ரூ.1 கோடியே 34 லட்சம் செலவில் 60 அடுக்குமாடி குடியிருப்புகளையும், சேப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட மீர்பக்ஷி அலி தெருவில் ரூ.62 லட்சம் செலவில் 32 அடுக்குமாடி குடியிருப்புகளையும் மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் போது துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்ததாவது :–

மழை மற்றும் தீ விபத்துக்களால் தோமையப்பன் தெருவில் வசித்துவந்த மக்கள் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி வந்தனர். அவர்களுக்கு உரிய பாதுகாப்பான வீடுகளை அமைத்துதரும் வகையில் தலைவர் கலைஞர் அவர்களின் தி.மு.கழக அரசு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 92 அடுக்குமாடி குடியிருப்புகளை ரூ. 1 கோடியே 96 லட்சம் செலவில் கட்டி இப்பகுதியில் வசித்தவர்களுக்கு வழங்கியுள்ளது. தோமையப்பன் தெருவில் கட்டப்பட்டுள்ள ஒரு வீட்டின் பரப்பளவு 236 சதுர

அடியாகும். ஒரு வீட்டிற்கான செலவு ரூ. 2.25 லட்சம் ஆகும். மீர் பக்ஷி அலி தெருவில் கட்டப்படுள்ள ஒரு வீட்டின் அளவு 197 சதுர அடி ஆகும். ஒரு வீட்டிற்கான செலவு ரூ. 1.94 லட்சம் ஆகும். குடிசை மாற்று வாரியத்தால் இப்பகுதியில் நடைபாதை வசதி, கழிவுநீர் வசதி, நீர்தேக்கத் தொட்டி ஆகியன அமைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு குடிசைமாற்று வாரியத்துறை அமைச்சர் திரு.சுப.தங்கவேலன், சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைச் செயலாளர் திரு. அசோக் டோங்கரே, தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.தா.கி.இராமச்சந்திரன், சென்னை மாநகராட்சி உறுப்பினர்கள் திரு.மா.பா.அன்புதுரை, திரு. மதன், திரு.பி.சிவகுமார், திருமதி. சு. செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * * * * * * * * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.